பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

தே.செ.வெ.எண்.07 நாள் : 02.12.2017

**இந்திய தேர்தல் ஆணையம் எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலையொட்டி கூடுதலாக பொதுப்பார்வையாளர் மற்றும் கண்காணிப்பு பார்வையாளர்களை நியமித்துள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

-----

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தல் 21.12.2017 அன்று இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. எனவே, மேற்கண்ட தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் நன்னடத்தை விதிகள் முழுமையாக அமலில் உள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம் டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் இடைத்தேர்தலை கண்காணிக்க கூடுதலாக தேர்தல் பொதுப்பார்வையாளராக திருமதி.அல்கா ஸ்ரீவஸ்தவா, இ.ஆ.ப., (Tmt. Alka Shrivastava, I.A.S.,) அவர்களையும், காவல் பார்வையாளராக திரு.குர்ஷீத் அகமது, இ.கா.ப., (Mr. Khursheed Ahmed, I.P.S.,) அவர்களையும் நியமித்துள்ளது. பொதுப்பார்வையாளரை 94450 36541 என்ற கைபேசி எண்ணிலும், காவல் பார்வையாளரை 94450 36533 என்ற கைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

ஏற்கனவே இடைத்தேர்தலை பொதுப்பார்வையாளர் திரு.கம்லேஷ் குமார் பந்த், இ.ஆ.ப., அவர்களும் (94450 71063), காவல் பார்வையாளர் திரு.இம்மானுவேல் கே. முய்வா, இ.கா.ப., அவர்களும் (94450 71061) கண்காணித்து வருகிறார்கள்.

டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் இடைத்தேர்தலை முன்னிட்டு, தேர்தல் விதிமீறல் குறித்து கண்காணித்திட பறக்கும் படை, நிலைக்கண்காணிப்பு குழு மற்றும் வீடியோ கண்காணிப்பு குழு போன்ற பல்வேறு கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 1913 மற்றும் ஒரே நேரத்தில் வரும் 4 அழைப்புகளை ஏற்றுக்கொள்ளும் வசதியுடைய 1800–4257012 என்ற தேர்தல் கட்டுப்பாட்டு அறை எண்ணிலும், மேலும், 75502 25820, 75502 25821 என்ற வாட்ஸ் ஆப் எண்களிலும் பொதுமக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி